விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 187 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 10 புதன்கிழமை (24.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




– சுமார் 31 வருடங்களுக்குப் பின் –

## பருத்தித்துறை வெளிச்ச வீடு இராணுவத்தினரால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுமார் 31 வருடங்களுக்குப் பின் பருத்தித்துறை வெளிச்ச வீட்டுப்பகுதி இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31 வருடங்களுக்கு மேலாக பருத்தித்துறை வெளிச்ச வீடு அமைந்துள்ள பகுதியை ஆக்கிரமித்து இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

அதனால் வெளிச்ச வீட்டுப் பகுதியை மக்கள் பார்

15ஆம் பக்கம் பார்க்க

## களேபரமானது பாராளுமன்றம்

### செங்கோலை கைப்பற்ற எதிர்க்கட்சி முயற்சித்ததால் குழப்பம்



03ஆம் பக்கம் பார்க்க

முல்லைத்தீவில்

## யானை தாக்கியதில் இளைஞன் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு இத்திமடு கிராமத்தில் வயல் காவலுக்குச் சென்ற இளைஞன் ஒருவர் யானை தாக்கியதில் உயிரி

15ஆம் பக்கம் பார்க்க

# செம்மணி அகழ்வு தற்காலிகமாக நிறுத்தம்

- 19 என்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டன.
- அடுத்தகட்ட அகழ்வுப் பணி ஜூலை 15ஆம் திகதி ஆரம்பம்.

(15ஆம் பக்கம் பார்க்க)



காக்கைதீவில் தீ விபத்து

## பாரிய புகை மண்டலத்தால் பொதுமக்கள் அசௌகரியம்



16ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் மரணம்



(கிளிநொச்சி)

ஏ-9 பிரதான வீதி கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தில் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த பெருமாள் கணேசன் என்பவரே உயிரிழந்தவராவார்.

மாலை நேரம் தனது நடைப் பயிற்சியை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை

16ஆம் பக்கம் பார்க்க

யாழ். மாவட்டச் செயலகம் முன்

## வேலையற்ற பட்டதாரிகள் நாளை கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்க செயலாளர் ஜேம்ஸ் கபிலன் போல் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக

15ஆம் பக்கம் பார்க்க

## புதிய வேதன, ஓய்வூதிய ஆணைக்குழு ஸ்தாபிப்பு

### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அரச அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் வேதன முரண்பாடுகளுக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதற்கும், அரச சேவையை நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மறுசீரமைப்பதற்கும் புதிய "வேதன மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழு" ஒன்றினை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்து

15ஆம் பக்கம் பார்க்க

சித்தங்கேணியில் வீதி விபத்து

## குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி மாவடி வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வீரவேல்

15ஆம் பக்கம் பார்க்க

பலாலி விமான நிலையத்தில்

## "நடராஜர் சிலையை" நிறுவ நடவடிக்கை எடுக்குக

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கென (பலாலி) அன்பளிப்பாக வழங்கப்பட்ட நடராஜர் சிலையை பிரதிஷ்டை செய்ய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை
அன்று இறைபதம் எய்திய

**அமரர் நாகலிங்கம் அப்புலிங்கம்**
**(லிங்கம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் உற்றார் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாணி ரெக்ஸ், யாழ்ப்பாணம். மணிவர்ணன் குடும்பம் நல்லூர்

(C-5899)

## கண்ணீர் அஞ்சலி



கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை
அன்று இறைபதம் எய்திய

**அமரர் நாகலிங்கம் அப்புலிங்கம்**
(லிங்கம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

தோற்றம்: 02.10.1946 மறைவு: 21.06.2026

அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பிரிவால் துயருறும்:*
சிறி நதியா நகை மாளிகை
சக நிறுவனங்களும் ஊழியர்களும்

(C-5906)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
02
-
10
-
1946



மறைவு
21
-
06
-
2026

கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் எய்திய
எமது நீண்டகால நட்புறவைப் பேணிய

**அமரர் நாகலிங்கம் அப்புலிங்கம்**
(லிங்கம் கிறீம் ஹவுஸ் உரிமையாளர்)

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*பிரிவால் துயருறும்:* E.S.P. நாகரத்தினம்
கஜமுகன் ஹாட்வெயார்
147, 149 , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C-5904)

# மரண அறிவித்தல்



மலர்வு 02.10.1946 உதிர்வு 21.06.2026

## நாகலிங்கம் அப்புலிங்கம்
## (ஸ்தாபகர் லிங்கம் கிறீம் ஹவுஸ்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் அப்புலிங்கம் அவர்கள் கடந்த 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் இராசையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் கமலாம்பிகை அப்புலிங்கம் அவர்களின் பாசமிகு கணவரும் கீதா (இலங்கை), கீதராஜ் (லண்டன்), கீதாகரன் (கனடா), கீதரமணன் (அமெரிக்கா), கீதசகிலன் (இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தகுமார், கலா, அகல்யா, வித்யா, ரேகா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், கௌரீஸ்வரி மற்றும் திலகவதி, இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், மனோன்மணி, தெய்வேந்திரம், மகாலிங்கம் மற்றும் கந்தசாமி, இரத்தினசிங்கம், பரமாநந்தன், சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நாகேஸ்வரி, ராகினி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் சகலனும் கபிலயன், வேணுகன், பாணுகன், ஹரிஸ், பிரவீனா, பிருத்திகா, சயானுகா, மகதீஸ், பவுனேஸ், கவினாஸ், சிவாங்கி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் (75/17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) 21.06.2026 ஞாயிற்றுக்கிழமையிலிருந்து 24.06.2026 புதன்கிழமை காலை 10 மணி வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து இறுதிக் கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(7900)

இல. 75/17,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வசந்தகுமார் (மருமகன்) : +94 76 097 8003
கீதசகிலன் (மகன்) : +94 77 711 1410

தகவல் :
லிங்கம் கிறீம் ஹவுஸ்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2027 முதல் ஒரே மாதிரியான முன்பள்ளி கல்வி முறைமை

## அமைச்சர் சரோஜா அறிவிப்பு



(கொழும்பு)

2027 ஆம் ஆண்டளவில் நாட்டின் ஒன்பது மாகாணங்களுக்கும் ஒரே மாதிரியான முன்பள்ளி கல்வி முறைமையை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். ஆரம்பப் பருவ சிறுவர் அபிவிருத்தி கல்வித் திட்டத்தின் ஆரம்ப விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பப் பருவ சிறுவர் கல்வியானது நாட்டின் ஏனைய கல்விச் செயற்பாடுகளுடன் இணையாகச் செல்ல வேண்டும் எனவும், அதற்கு கல்வி அமைச்சும் பங்களிக்க வேண்டும்.

நாட்டில் முன்பள்ளி பாடத் திட்டம் முறைசாரா வகையில் காணப்படுவதுடன், அது இன்னும் ஒரு அரச சேவையாக மாற்றமடையவில்லை.

முன்பள்ளி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான முறையான நடைமுறையோ அல்லது அவர்களைக் கண்காணிப்பதற்கான அமைச்சோ இல்லை என்றும் அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.

இந்த புதிய முன் முயற்சியானது இலங்கையின் ஆரம்பகால சிறுவர் கல்வியை முறைப்படுத்தி, அதனை தேசிய கல்வி நீரோட்டத்துடன் இணைப்பதற்கான ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகிறது. (நி)

# எல் நினோ தாக்கம் நாட்டில் ஆரம்பம்

## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**எல் நினோ நிலைமையின் தாக்கம் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

நாட்டின் தற்போதைய வானிலை மாற்றம் மற்றும் எல் நினோ நிலைமை குறித்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப் பாளர் மெரில் மெண்டிஸ் முக்கிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார்.

தென்மேற்கு பருவக்காற்று நிலைமை நாட்டில் நிலவிய போதிலும் மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் பெய்யும் மழையின் அளவு குறைவடைந்து வருவதால் எல் நினோ நிலைமை ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

எல் நினோ நிலைமையின் பலத்த தாக்கம் இம் மாதங்களில் நாட்டில் எதிரொலிக்கும் இக்காலப் பகுதியில் மழையின் அளவும் கடுமையான வறட்சியும் ஏற்பட வாய்ப்புள்ளதுடன் வெப்ப நிலையும் கணிசமாக உயரக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் ஒட்டுமொத்த மழைவீழ்ச்சி குறைவடைவதன் காரணமாக நீர் மின் உற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த்தேக்கங்களுக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சி குறையும் அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சபை அமர்வில் பதற்றம் 10 நிமிடங்களுக்கு சபை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அவசர பாராளுமன்ற விவாதம் ஒன்றை நடத்துமாறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய, சபாநாயகர் இது குறித்து ஆளுங்கட்சியிடம் வினவியபோது, அதற்கு உடன்பட முடியாது எனவும், தேவைப்பட்டால் இது தொடர்பாக வாக்கெடுப்பு நடத்துவதற்கு உடன்படுவதாகவும் சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்து கருத்துக்களை வெளியிடத் தொடங்கியதை அடுத்து, பாராளுமன்றத்திற்குள் வாக்குவாதம் ஏற்பட்டு பதற்ற நிலை உருவானது.


இதன்போது கருத்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, 8 நீதிபதிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றமை மற்றும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி நிலைமை காரணமாகவே இந்த விவாதத்தைக் கோருவதாகக் குறிப்பிட்டார்.

இதனை அடுத்து பாராளுமன்ற அமர்வு 10 நிமிடங்களுக்கு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவால் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் செங்கோலை கைப்பற்ற முற்பட்டமையினால் பாராளுமன்றத்தில் குழப்பநிலை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 13 - 03 - 1938



இறப்பு 23 - 06 - 2026

## திருவாளர் சிதம்பரன் கதிரவேலு

(ஸ்ரீ பராசக்தி அம்மன் தேவஸ்தானத்தின் ஆதீனகர்த்தா, ஓய்வு பெற்ற சீமெந்து கூட்டுத்தாபனத்தின் செவ்வை பார்ப்பாளர்)

மாவை கலட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் சிதம்பரன் கதிரவேலு அவர்கள் நேற்று (23.06.2026) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரன் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - வைரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி அவர்களின் பாசமிகு கணவரும் தீனதயாபரன், சத்தியகௌரி, சிதம்பரகௌரி, பாலகௌரி, மங்களகௌரி, வாசுதேவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, மாரிமுத்து, நடேசன், கணேசன் மற்றும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2026) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாவை கலட்டி,
தெல்லிப்பழை.

மகன்மார்: 077 296 6330
077 527 9827

தகவல்: குடும்பத்தினர். (C-5907)

# 05ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 31.05.1966

உதிர்வு 20.06.2021

அமரர்.திருமதி

## யசோதா திரவியம்

பரந்த வானொத்த உன் அன்பினிலே திரண்ட மேகங்களாய்
மகிழ்வோடு நாம் தவழ்ந்திருந்த வேளையிலே.
யாரிடமும் சொல்லாது வேறிடம் சென்று பல வருடங்கள்
ஆகியதோ ஆண்டுகள் பலவானாலும் நீர் திரும்பி வருவீரென உங்கள்
அன்பிற்காய் கண்ணீருடன் காத்திருக்கும்..........

(2442)

இல.22,2 ஆம் ஒழுங்கை பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

**வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.**





இதில் 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி வீரர் டி.ஆர்.அஷான் 13 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், முல்லைத்தீவு வள்ளிபுனம் மகா வித்தியாலய வீரர் ஆர். சந்தோஷ் 12.55 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், யா/ வீமன் காமம் மகா வித்தியால வீரர் 12.43 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வீராங்கனை ஏ.யதுசிகா 8.79 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும், உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை டி. டனில்லா 8.71 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிவீராங்கனை ஜெ.மரியதிலக்சி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.





அத்துடன் 14 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய வீராங்கனை கே. திவாரகி 1.33 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி வீராங்கனை என். யன்ஷிகா 1.33 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் மன்னார் சென் லூசியா மகா வித் தியாலய வீராங்கனை சி. டிசோனி 1.33 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி வீராங்கனை கே. துஷ்யந்தி 1.43 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீராங்கனை ரி. ஆரதி 1.41 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், திருமுறிகண்டி இந்து வித்தியாலய வீராங்கனை எஸ். நந்தினி 1.39 மீற்றர் உயரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை வீராங்கனை எஸ். சரணியா 26.75 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கப் பதக்கத்தையும், கெருடாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வீராங்கனை எம்.கம்ஷா 26.49 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதழுடன் வெள்ளிப் பதக்கத்தையும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனை ஏ. ஆயிலை 25.99 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)





## மாகாணமட்ட பளுதூக்கல் போட்டி
## சென்.பற்றிக்ஸ் கல்லூரி 3 பதக்கங்கள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்டோருக்கான பளுதூக்கல் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

அதன்படி 55 கிலோ நிறைப் பிரிவில் ஆர்.அருளன்பன் முதலாம் இடத்தையும், 109 கிலோ நிறைப் பிரிவில் ஜெ.கிரிம்ஷிகன் இரண்டாம் இடத்தையும், 89 கிலோ நிறைப் பிரிவில் எஸ்.ஸ்ரனிஸ்ரன் மூன்றாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யட்டுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் சிறந்த வீராங்கனைகளுக்கான விருதுகள் வழங்கி வைப்பு

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான பெருவிளையாட்டுக்களில் சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.




இதில் பெண்களுக்கான போட்டிகளில் எல்லேப் போட்டியில் முல்லைத்தீவு ஐயன்குளம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரியங்கா, வொலிபோல் போட்டியில் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அனோசிகா, கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் கனகபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அபிஷா, கூடைப்பந்தாட்ட போட்டியில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஜொபோஷினி, மேசைப் பந்தாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை சேர்ந்த ஜவானா, சதுரங்கத்தில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த நர்த்தவி, எறிபந்தாட்டத்தில் மன்னார் அடம்பன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அக்சயா, கரம் போட்டியில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச் சேர்ந்த பிரணவி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் பூப்பந்தாட்டத்தில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மேரி பெர்லின் பெரேரா, கபடியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பிரணவி, மென்பந்து கிரிக்கெட்டில் நடேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த அனுஸ்கா, வலைப்பந்தாட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தங்கவி, கராத்தே போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த மிஷாஜினி, கைபந்தாட்டத்தில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த திருஷா, அரை மரதன் போட்டியில் முல்லைத்தீவு பாரதி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அனித்தா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் யூடோ போட்டியில் முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ரஜிதா, குத்துச்சண்டைப் போட்டியில் இரணைப்பாலை ரோமன் கத்தோலிக்க பாடசாலையைச்சேர்ந்த அபிஷாளினி, தைக்கொண்டோ போட்டியில் தட்சணாமருதமடு மகா வித்தியாலயத்தைச்சேர்ந்த கோனிலா, மல்யுத்தப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஜதுஷா, நீச்சல் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வெண்ணிலா, காற்பந்தாட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த யன்சிகா, ரெனிஸ் போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சுயானிகா, பளு தூக்கும் போட்டியில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த கோஷிகா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (3-90)

# மாகாணமட்ட கால்பந்தாட்டம் சென்.பற்றிக்ஸ் தேசியத்திற்கு தகுதி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையேயான மாகாண மட்ட கால்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரியின் மூன்று பிரிவு அணியினரும் தேசிய மட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

அதன்படி வட மாகாண பாடசாலைகளுக்கு இடையே 20 வயதிற்குட்பட்டோருக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி மைதானத்திலும், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியை 02:00 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று வடக்கு மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டத்திற்கும் தெரிவானது.

அத்துடன் 18 வயதிற்குட்பட்டோருக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்திலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை மன்னார் சென் சேவியர்ஸ் கல்லூரி 02:00 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற சென் பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டத்திற்கும் தெரிவானது.

மேலும் 16 வயதிற்குட்பட்டோருக்கான காற்பந்தாட்டப் போட்டிகள் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்திலும், யூனியன் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்றது.

இதில் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியை 02:00 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டத்திற்கும் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (3)










## துடுப்பாட்ட இறுதிப்போட்டி மாலிசந்தி மைக்கல் அணி வெற்றி

யாழ்ப்பாணம் வடமராட்சி மைக்கேல் விளையாட்டு கழகத்தின் துட்டுப்பாட்ட இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் மைக்கல் விளையாட்டு கழக துடுப்பாட்ட அணி தலைவர் மனோகரன் ரகுவரன் தலைமையில் ஆரம்பமானது.

இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய அல்வாய் யூத் அணி மற்றும் மாலிசந்தி மைக்கல் அணி ஆகியவற்றிற்கான இறுதி போட்டி வீரர்கள் அறிமுகம் இடம்பெற்றதை தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. இதில் மாலிசந்தி மைக்கல் வெற்றி பெற்றது. (3-60)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்- 2025

**கிளி/ பளை மத்திய கல்லூரி**

9ஏ
ஜெ.சஞ்சனா, என். கவர்ச்சிகா.

8ஏசி
கே.டிஷாந்தன், பி.பவித்திரா.

**கிளி/ பளை தர்மக்கேணி அ.த.க பாடசாலை**

9ஏ
ச. வானுஜா




(யாழ்ப்பாணம்)

தொல்புரம் ஆரம்ப மருத்துவப் பிரிவின் வடக்கு மதில் நிர்மாணம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடை பெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி M. ஹர்ஷன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் VPSD பத்தி ரண பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வடக்கு மதிலைத் திறந்து வைத்தார்.

நோயாளர்கள் நலன் புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில், மருத்துவப் பணியாளர்கள், நலன்புரிச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8)

## வெற்றிலைக்கேணியில் வெடி மருந்துடன் கடற்றொழிலாளர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெடி மருந்துடன் கடற்றொழிலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிலைக்கேணி பகுதியில் சட்டவிரோத கடற்றொழிலில் சிலர் ஈடுபடுவதாக கடற்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கடற்படையினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்

அதன் போது ஒரு கடற்றொழிலாளர் வெடி மருந்துகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரின் படகினையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை அனுமதி பத்திரம் இன்றியும், வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் மூன்று படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர் களால் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8-33)

## இலட்சார்ச்சனைப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் இன்று புதன் கிழமை காலை 6 மணி -11.30 மணி வரை இலட்சார்ச்சனை நடைபெற்று தொடர்ந்து விசேட பூஜைகள் இடம்பெற்று அன்னதானம் வழங்கப்படும்.

தொடர்ந்து அன்றைய தினம் மாலை 3 மணி தொடக்கம் மாலை 6.30 மணிவரை இலட்சார்ச்சனை நடைபெற்று அடியவர்களுக்கு இராப்போசனம் வழங்கப்படும்.

தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு 108 சங்குகளால் அம்பிகைக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.

அத்துடன் விசேட பூஜைகள் நடைபெற்று சுவாமி வீதி உலா வந்ததும் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

## சுற்றுலா அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அராசாங்க அதிபருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

சுற்றுலா அமைச்சின் பணிப்பாளர் நாயகம் எச். பி சோமதிலக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந் துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வாண்டு சுற்றுலர அமைச்சின் ஊடாக 130 மில்லியன் ரூபாவில் நடை முறைப்படுத்தவுள்ள அபிவி ருத்தி திட்டங்களின் தற்போ தைய நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (8)

## கொடிச்சீலை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கொடிச்சீலை வழங்கும் நிகழ்வானது நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

கீரிமலையிலிருந்து நாளை காலை 11.45 மணிக்கு மஹோற்சவக் கொடிச்சீலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு மாவைக் கந்தன் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெறும். (8-33)

## வட இலங்கை சங்கீத சபையின் கலாவித்தகர் பட்டமளிப்பு விழா





(அராலி)

வட இலங்கை சங்கீத சபை நடத்திய 27 ஆவது கலா வித்தகர் பட்டமளிப்பு விழாவானது கடந்த சனிக்கிழமை மருதனார் மடத்தில் உள்ள வட இலங்கை சங்கீத சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வட இலங்கை சங்கீத சபையின் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமான மாலதி முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் பிரதம அதிதியாகவும், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோ.ஜெயச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலைஞர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (8-10)

## முல்லைத்தீவில் டித்வாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடும் புதிய வீடமைப்பும்


(நெளுக்குளம்)

"டித்வா" சூறாவளியினால் வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குதல் மற்றும் புதிய வீடமைப்பிற்கான அடிக்கல் நாட்டு விழா, கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் நடைபெற்றது.

இச் சூறாவளி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,121 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதுடன், அவர்களுக்கான 50 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத்தொகை வழங்குதல் மற்றும் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டுதல் என்பன இதன்போது இடம்பெற்றன.

இதில் அதிகளவிலான வீட்டுச் சேதங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலேயே பதிவாகியுள்ளது டன், அந்த வீடுகளின் எண்ணிக்கை 499 ஆகும்.

அங்கு உரையாற்றிய பிரதி அமைச்சர், அனர்த்தத்தினால் வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கான புதிய வீடமைப்புப் பணிகளை ஆறு மாதங்களுக்குள் நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். அத்துடன், தமக்கென ஒரு வீட்டை அமைத்து பாதுகாப்பாக வாழ்வதே இக் குடும்பங்களின் எதிர்பார்ப்பு எனவும், அதனை விரைவாக நிறை வேற்ற முடிந்தது மக்கள் பெற்ற வெற்றியாகும் எனவும் அவர் தெரிவித்தார். (3-299)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்னணு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

யக்கல பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது.

மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த உளவுத் தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது.

சந்தேக நபர் முக்கியமாகப் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களைக் குறிவைத்து, இணையம் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்பரம் செய்வதன் மூலம் இந்த மின்னணு சிகரெட்டுகளை விற்பனை செய்து வந்ததாகப் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி)


## திருக்குறள் வழி வரலாற்று

இதய அஞ்சலிகள்

அன்னை மடியில் 22 - 07 - 1941



இறை அடியில் 20 - 06 - 2026

அமரர்.

### தாமோதரம்பிள்ளை மணிவாசகர்

- "ஜோதி ஆச்சிரமத்தில்" பொன்னம்மாவுடன் நட்பில் கந்தனின் கந்தசஷ்டி 2 ஆம் திருவிழா உபயகாரர்களாக தாமோதரம்பிள்ளையும் பெண் நாகரத்தினமும் அன்று(1969-2014)
- மாமனாரின்(கிருஷ்ணர்) திருப்பணி உபயமாக கந்தனின் கந்தவன ஆலயத்தில் காஞ்சிமா வடிவேலும் பெண் சௌந்தரியம்மாவும் அன்று (1974-1981)
- "தில்லையம்பல மடத்தில்" (வரைபட இல:- 1741, வழக்கு இல, 5585) கந்தனிடம் தஞ்சமடைந்தனர் வேலுப்பிள்ளையும் பெண் பார்வதியம்மாவும் அன்று (1984)
- கந்தனின் திருவருளால் "பொன்னம்மா-நாகரத்தினம் ஆகியோரின் நட்புவழி சிங்கபூரில் கப்பல் ஏறினார்" செல்வமும்" அன்று (1984) 2 ஆவது பொறியியலாளராக ஓய்வு நிலையில் இன்று (2024)
- அமரர்களான தாமோதரம்பிள்ளை பெண் நாகரத்தினம் தம்பதிகளின் புதல்வரான அமரர் மணிவாசகர் அவர்களின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செய்நன்றி அறிதல்- 10(110)

ஜோதி ஆச்சிரமம்,
சிவன் கோவிலடி, கந்தவனம்,பொலிகண்டி.

தங்கராசா-செல்வசோதி
தங்கராசா- செல்வரத்தினம் (செல்வம்)

(2447)



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**வடலியடைப்பு வீதி, இல 18, வட்டாரம் 08**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 08, வடலியடைப்பு வீதியிலுள்ள இல: 18 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் கணபதியார் நாகமுத்து என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை சின்னப்பு கைம்பெண் வள்ளியாச்சி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தா.வயித்திலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 383/17.12.1933ஆம் இலக்க உறுதியால் குறித்த சண்முகம் கணபதிப்பிள்ளையும் பெண் நாச்சிப்பிள்ளையும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

செல்லத்துரை பரணீதரன் ஆகியவர் குறித்த ஆதனமானது தனது பேர்த்தியார் சின்னப்பு பெண் வள்ளியாச்சிக்கு நன்கொடை உறுதிப்படி சொந்தமாக இருந்தது என்றும், குறித்த சின்னப்பு பெண் வள்ளியாச்சி தனது சீவிய காலத்தில் சின்னப்பு செல்லத்துரைக்கு வாய்ச்சொல் நன்கொடை வழங்கியிருந்தார் எனவும், குறித்த சின்னப்பு பெண் வள்ளியாச்சியும், சின்னப்பு செல்லத்துரையுமாகச் சேர்ந்து குறித்த ஆதனத்தினை 50 வருடங்களாக ஆட்சி செய்து வந்தார்கள் எனவும், அவர்களின் பின் தானே குறித்த ஆதனத்தினை 30 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்து வருவதாகவும், எவ்வித தடையும், குறுக்கீடுமின்றி ஆட்சி செய்து குறித்த ஆதனத்திற்கு சொந்தமும் உரித்துமுடையவராகியதாக வெளிப்படுத்தி, பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர் காமநாதன் முகதாவில் 15299/28.05.2015ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

செல்லத்துரை பரணீதரனும் பெண் கிருபாஜினியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 8349/19.10.2018ஆம் இலக்க உறுதியால் வைத்திலிங்கம் செல்வரத்தினம் ஆகியவருக்கு நிபந்தனையறுதியாக கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

செல்லத்துரை பரணீதரனும் பெண் கிருபாஜினியும் ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8756/13.10.2019ஆம் இலக்க உறுதியால் குறித்த வைத்திலிங்கம் செல்வரத்தினமும், பெண் புஸ்பராணியும் ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்து முடையவரானார்கள்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "பாலைப்புலோவும் காளாவிகாடும்"
இறை: **சுழிபுரம்**
விஸ்தீரணம்: நில.பர.இலா 3 குளி 06
எல்லைகள்: கிழக்கு- முருகேசு சிவராசாவுக்கும் பெண் சிவபாக்கியத்துக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு- பகிரங்க வீதி, மேற்கு- கையொழுங்கை, தெற்கு- முருகேசு தேவராசாவின் உரித்தாளரின் ஆதனம்

குறித்த செல்லத்துரை பரணீதரனும் பெண் கிருபாஜினியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செல்லத்துரை பரணீதரனும் பெண் கிருபாஜினியும் ஆகியவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**



**University of Jaffna**
**Sri Lanka**

**Dr.M.Ganesharatnam**
**Memorial Oration -2026**

titled
**"From Open Hands to Robotic Precision: Surgical Evolution, Innovation and Service"**

by:
**Mr. Kanapathippillai Rajaratnam**
**MBBS (UOJ), MS (UOC),**
**FRCS (GenSurg: Eng), Dip in TSCP (UCL)**
**Consultant General & Colorectal Robotic Surgeon**
**Bedford Hospital, UK**

on

**Thursday, 25th June 2026 at 3.00 p.m**
**at the Hoover Auditorium,**
**Faculty of Medicine,**
**University of Jaffna.**

All are cordially invited.

**Registrar,**
**University of Jaffna.**

(C-5901)


# பொதுத்துறை சார்ந்த பிரச்சினைக்கு தீர்வு காண ஆணைக்குழு நியமனம்



(கொழும்பு)

அரசு ஊழியர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண, 15 உறுப்பினர்களைக் கொண்ட ஊதியம் மற்றும் ஓய்வூதிய ஆணையத்தை நியமித்து ஜனாதிபதி வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆணையகம் தெல்கே அசோக பீரிஸ் அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதிய தாரர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தற்போதைய சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது, அரசு ஊழியர்களின் தொழில்முறைத் திறனை மேம்படுத்துவது மற்றும் புதிய தொழில்நுட்ப மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப பொதுச் சேவையை எவ்வாறு கட்டமைப்பு ரீதியாகச் சீரமைப்பது என்பது குறித்த பரிந்துரைகளைப் பெறுவது ஆகியவை இவ்வாணையத்தை அமைப்பதன் நோக்கங்களாகும்.

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆவது பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி)

# மாணவர்களின் பாதுகாப்பிற்கு அதிபர்களே முழுப் பொறுப்பு

## கல்வி அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும், பாலியல் துன்புறுத்தல்கள் அல்லது துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறும்போது அதற்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுப்பதும் பாடசாலை அதிபர்களின் முழுமையான பொறுப்பாகும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சினால் வெளியிடப் பட்டுள்ள விசேட சுற்றறிக்கைகளின்படி, மாணவர்களைப் பாதுகாப்பதற்கான தெளிவான பொறுப்புகள் அதிபர்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்குள் சிறுவர் பாதுகாப்பு வழிமுறைகள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவது தொடர்பான 12/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, மாணவர்கள் எவ்விதமான உடல் அல்லது உளவியல் ரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகாமல் இருப்பதை பாடசாலை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.


அனைத்துப் பாடசாலைகளிலும் "பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்" அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து, புகார்களுக்குச் சரியான முறையில் தீர்வு காண வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் பயிற்சி மையத்தில் பாரிய தீ விபத்து

### 15 மாணவர்கள் உயிரிழப்பு




(டில்லி)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள ஒரு பயிற்சி மையக் கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 15 மாணவர்கள் உயிரிழந்ததாக இந்திய ஊடகங்கள் திங்கட்கிழமை செய்தி வெளியிட்டுள்ளன.

தீ விபத்து ஏற்பட்ட போது, ஏராளமானோர் கட்டிடத்திற்குள் சிக்கிக் கொண்டனர். மேலும், தப்பிப்பதற்காக சில மாணவர்கள் கட்டிடத்தின் முதல் தளத்திலிருந்து குதித்ததாகக் கூறப்படுகிறது.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நீடித்த தீயைக் கட்டுப்படுத்திய பின்னர், இடிபாடுகளுக்கு மத்தியில் 15 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன.

கட்டிடத்தின் மேல் தளத்தில் ஏற்பட்ட தீ வேகமாகப் பரவியது. மாணவர்கள் மற்றும் பிறர் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கீழே குதிக்கும் காணொளிகள் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு குதித்ததில் காயமடைந்த பலர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இந்த விபத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குத் தனது இரங்கலைத் தெரிவித்ததோடு, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 இலட்சம் இந்திய ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார். (3)

## ஈரான் மீத...

## தளர்த்திய...

(வோஷிங்டன்)

**வோஷிங்டனுக்கும் டெஹ்ரானு... இடையே சுவிட்சர்லாந்தில் நடை... ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தை க... தொடர்ந்து, ஈரான் எண்ணெய் ஏற்... மீதான தடைகளை அமெ... தற்காலிகமாகத் தளர்த்தியுள்ள... சர்வதேச ஊடகங்கள் செய்தி வெ... டுள்ளன.**

அமெரிக்க திறைசேரியின்படி, பேச்சுவார்த்தைகள் தொடரும் வேளையில், ஈரான் கச்சா எண்ணெய், பெற்றோலியப் பொருட்கள் மற்றும் பெற்றோலிய வேதிப் பொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனையை அனுமதிக்கும் 60 நாட்கள் பொது உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, நடந்து வரும் இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாகும் என்றும், இறுதி ஒப்பந்தத்தை நோக்கிய முன்னேற்றத்திற்கு ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டது என்றும் அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித்தார்.

இந்தத் தற்காலிக தடைநீக்கம் ஒகஸ்ட் 21 வரை அமுலில் இருக்கும் என எதிர்பார்க்கப்படு...

## ரஷ்யா மீது ட்ரோன்களை ஏவி தாண்டவமாடும் உக்ரைன்

### விமான நிலையங்களை மூடியது ரஷ்யா



(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவை நோக்கி சுமார் 300இற்கும் மேற்பட்ட ஆளில்லா விமானங்கள் மூலம் உக்ரைன் இராணுவம் ஞாயிற்றுக்கிழமை பாரிய தாக்குதலில் ஈடுபட்டது.

இதில் 59 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா கூறியுள்ளது.

தாக்குதல்களைத் தொடர்ந்து மொஸ்கோவின் நான்கு சர்வதேச விமான நிலையங்கள் தற்காலிகமாக மூடப்படுவதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி அதிகாலை 3 மணியளவில், ஆளில்லா விமானங்கள் தலைநகரை நோக்கி வருவதாக மேயர் செர்ஜி சோபியானின் தெரிவிக்கத் தொடங்கினார்.

காலை 10 மணிக்குள், நகரைச் சுற்றி மொத்தம் 80 உக்ரைனிய ஆளில்லா விமானங்களை வான் பாதுகாப்புப் படைகள் இடைமறித்ததாக அவர் கூறினார்.

தலைநகர் மொஸ்கோ மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு கணிசமான அளவு எரிபொருளை வழங்கும் மொஸ்கோவி... ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை உக்ரைன் குறிவைத்த சில நாட்களுக்குப் பிறகு இந்தத் தாக்குதல்கள் நடந்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை இரவுக்கும் திங்கட்கிழமை காலைக்கும் இடையில் ரஷ்யா முழுவதும் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவில் 301 உக்ரைனிய ஆளில்லா விமானங்களை இடைமறித்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும் திங்களன்று, உக்ரைன் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு சரக்குக் கப்பல் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் கப்பல் தீப்பிடித்ததாகவும், இதில் ஒரு மாலுமி உயிரிழந்ததாகவும் உக்ரைனிய அதிகாரிகள் தெரிவித்தனர். (3)

## ஐரோப்பாவை... கடும் வெ...

### நூற்றுக்கணக்கான ...

காலநிலை மாற்றத்தின் விளைவாக, ஐரோப்பிய நாடுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கடுமையான வெப்ப அலை வீசி வாட்டிவதைத்து வருகின்றது.

பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலி, போர்த்துகல் உள்ளிட்ட நாடுகளில் வெப்பநிலை 40பாகை செல்சியஸை தாண்டி பதிவாகி வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இது வெறும் கோடை வெப்பம் அல்ல. காலநிலை மாற்றத்தின் தீவிரமான எச்சரிக்கை மணி என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். பருவநிலை மாற்றமே இந்த அதீத வெப்பத்திற்குக் காரணம் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை 40 டிகிரி

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

## ...ான தடைகளை ...து அமெரிக்கா

...னுக்கும் ...டபெற்ற ...களைத் ...ற்றுமதி ...ரிக்கா ...ா தாக ...ளியிட்




கிறது.

இந்தத் தடைத் தளர்வு, வங்கிச் சேவை, காப்பீடு மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட ஈரான் எண்ணெய் ஏற்றுமதியுடன் தொடர்புடைய சில சேவைகளையும் உள்ளடக்கியது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.


கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை உள்ளிட்ட பல பிரச்சினைகளில் இரு தரப்பினரும் முன்னேற்றம் அடைந்துள்ளதாகத் தெரிவித்து வரும் நிலையில், அமெரிக்க மற்றும் ஈரான் அதிகாரிகள் சுவிட்சர்லாந்தில் பேச்சுவார்த்தைகளைத் தொடரும் வேளையில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை கட்டுப்பாடுகளை கணிசமாக தளர்த்துவதாக இருந்தாலும், இது தற்காலிகமானது மற்றும் ஈரான் மீதான அமெரிக்கத் தடைகளை முழுமையாக நீக்குவதற்கு சமமானதல்ல.

அதிகரித்த ஈரானிய எண்ணெய் விநியோகம் சர்வதேச சந்தைகளை வந்தடையும் என்ற எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், இந்த அறிவிப்பு உலகளாவிய எண்ணெய் விலைகளில் சரிவுக்கு வழி வகுத்தது. (3)

## கட்டார் எரிவாயு ஆலையில் பயங்கர வெடி விபத்து

- 13 பேர் உயிரிழப்பு
- 66 பேருக்கு படுகாயம்



(டுபாய்)

கட்டாரின் மிகப்பெரிய எரிவாயு ஆலை வளாகத்தில் ஏற்பட்ட வெடி சம்பவத்தில் சிக்குண்டு குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், 66 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ராஸ் லப்பான் தொழிற்துறை வளாகத்தில் அமைந்துள்ள, நாட்டின் முதன்மையான திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு சுத்திகரிப்பு நிலையத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெடி விபத்தில் உயிரிழந்தவர்கள் அனைவரும் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இந்த விபத்து திட்டமிட்டு நடத்தப்பட்ட ஒரு செயல் அல்ல என கட்டார் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (3)

## ...வ உலுக்கும் ...ப்ப அலை

### ...பாடசாலைகள் பூட்டு

...யுள்ள நிலையில், முதியவர்கள், குழந்தைகள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் கொண்டவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

...செல்சியஸைத் தாண்டியுள்ள நிலையில், நாட்டின் 3இல் ஒரு பகுதிக்கு "ரெட் அலர்ட" விடுக்கப்பட்டு, கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடும் வெப்பத்தால் பிரான்ஸில் 845 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பகல் நேரங்களில் வெளியில் செல்வது ஆபத்தானதாக மாறி...

இந்நிலையில், வெப்பத்தின் தாக்கத்தால் மக்கள் எளிதில் நீர்ச்சத்துக் குறைபாட்டிற்கு ஆளாவதைத் காணக்கூடிய நிலையில் இருப்பதால், பொது இடங்களில் மது அருந்துதல், பல ரயில்கள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் என்பவற்றுக்கு பிரான்ஸ் அரசு அதிரடியாகத் தடை விதித்துள்ளது. (3)



## தென்கொரிய முன்னாள் நீதியமைச்சருக்கு 25 ஆண்டுகள் சிறை!



(சியோல்)

தென் கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலின் ஆட்சிக் கவிழ்ப்புச் சதி முயற்சிக்குத் துணையாகச் செயற்பட்ட குற்றச்சாட்டில், தென் கொரியாவின் முன்னாள் நீதியமைச்சர் பாக் சுங்-ஜேவுக்கு சியோல் மத்திய மாவட்ட நீதிமன்றம் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2024 டிசம்பர் மாதத்தில், தென் கொரியாவில் ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அவசரமாகக் கூடி அதற்கு எதிராக வாக்களித்ததால், அந்த உத்தரவு வெறும் 6 மணித்தியாலங்களில் இரத்தானது.

இந்த விவகாரத்தில் ஜனாதிபதிக்குத் துணையாக நின்று, ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் ஈடுபட்டதாக முன்னாள் நீதியமைச்சர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட ஆரம்ப மணித்தியாலங்களில், அரசாங்கத்திற்கு எதிரான முக்கிய அரசியல் தலைவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டால், அவர்களை அடைப்பதற்குச் சிறைச்சாலைகளில் உள்ள இடவசதி குறித்து நீதியமைச்சர் பாக் சுங்-ஜே ஆராய்ந்ததாக அரச தரப்பு நிரூபித்துள்ளது.

அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, சட்டத்தையே சதித் திட்டத்திற்கான ஒரு கருவியாக அவர் மாற்றியதாகக் குறிப்பிட்ட நீதிமன்றம், அரச தரப்பு கோரிய 20 ஆண்டுகளை விடவும் கூடுதலாக 25 ஆண்டுகள் சிறைத்தண்டனையை விதித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்திச்சேவை தெரிவித்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணவாளக்கோல உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொல்புரம்-உடையார் வளவு ஸ்ரீ சக்தி அம்பாள்ஆலய மண வாளக்கோல உற்சவம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அடியவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ள னர். (8)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அதி நவீன வசதிகளுடன் நிர்மா ணிக்கப்பட்ட சங்கானை மருத்து வமனையின் விடுதி இன்றைய தினம் காலை 10 மணியளவில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்து வர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜாவால் திறந்துவைக்கப்படவுள்ளது. (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 200 | 180 | 200 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 210 | 200 | -- | 220 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 550 | 600 | 500 | 500 | 650 | 550 | 600 |
| தக்காளி | 850 | 900 | 800 | 700 | 800 | 250 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 250 | 150 | 200 | 200 | 160 |
| கோவா | 250 | 250 | 350 | 250 | 200 | 250 | 200 |
| கரட் | 400 | 400 | 500 | 450 | 400 | 400 | 350 |
| பூசணி | 120 | 140 | 150 | 100 | 200 | 130 | 120 |
| புடோல் | 200 | 150 | 200 | 200 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 250 | 140 | 100 | 140 | 200 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 300 | 500 | 450 | 200 | 340 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | -- | 200 | 200 | -- |
| பாகற்காய் | 1400 | 2200 | 1500 | 2000 | 1800 | 1000 | -- |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 250 | 400 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 330 | 320 | 300 | 400 | 400 | -- | -- |
| பயற்றங்காய் | 700 | 500 | 600 | 700 | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 400 | 400 | 400 | 400 | 400 | 400 | 350 |
| பீற்றூட் | 450 | 450 | 400 | 450 | 500 | 600 | 480 |
| கறிமிளகாய் | 550 | 500 | 1200 | 500 | 500 | 500 | 450 |
| முருங்கைக்காய் | 2000 | 1500 | 2000 | 700 | 1200 | 1100 | 1400 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 600 | 600 | 500 | 550 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 200 | -- | 150 | -- | -- |
| கீரை – 1 பிடி | 50 | 30 | 50 | 80 | 100 | -- | 70 |
| தேசிக்காய் | 600 | 400 | 400 | 460 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 110 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 450 | 350 | 350 | 400 | -- | 300 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 500 | 420 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 250 | 180 | 200 | 180 | 300 | 250 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | -- | 60 | -- | 40 |
| வல்லாரை | 80 | 70 | 80 | -- | 100 | -- | 70 |
| ஈரப்பலா | 250 | -- | 120 | -- | 300 | -- | -- |

# வட மாகாண கபடிப்போட்டி

## வவுனியா, யாழ். மாவட்ட அணிகள் சம்பியன்





(வவுனியா)

வடமாகாண விளையாட்டு திணை க்களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும் பெண்களுக்கான கபடிக்போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டது.

வடமாகாண விளையாட்டு திணைக் களம் நடத்தும் மாவட்டங்களுக்கு இடையிலான கபடிப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கிளி நொச்சி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. பரபரப்பான ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணி 45:38 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டது. மூன்றாம் இடத்தை யாழ் மாவட்ட அணி பெற்றது.

அத்துடன் பெண்களுக்கான இறுதி யாட்டத்தில் யாழ் மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ் மாவட்ட அணி 32:25 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. மூன்றாம் இடத்தை வவுனியா மாவட்ட அணி பெற்றது. (3-90)

# இராசிபலன்

24.06.2026
ஆனி 10, புதன்கிழமை
தசமி முன்னிரவு 9.34 மணிவரை
சித்திரை பிற்பகல் 5.38 மணி வரை

சுப நேரம் -4.25-5.55 மணிவரை
இராகு காலம் -11.55-1.25 மணிவரை
பாபகர தசமி, சுப முகூர்த்த நாள்

சந்திராஷ்டமம்- பூரட்டாதி,உத்தரட்டாதி

வளவன்

**மேஷம்** எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், போசன சுக முண்டு, உறவினர் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்** தேவைகள் பூர்த் தியாகும் நாள், நண் பர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப் புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாகஇருப்பீர்கள்.

**துலாம்** மகிழ்ச்சி அதிகரிக்கும் மனமாற்றம் அதிகரிக் கும் நாள், கண்ணியம் மிக்கவர்களின் சந் திப்புக்கள் இடம் பெறலாம், பய ணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமை யும், விரதம் வழி பாடுகளில் நம்பிக்கை கூடும், சான்றோர்களின சந்திப்பு இடம்பெறலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**ரிஷபம்** தொழில் வியாபாரம் சம் பந்தமாக எடுத்த காரி யங்களில் எடுத்த முயற் சிகள் கை கூடும், குடும் பத்தில் சுகங்களும் சந் தோசங்களும் கூடும் நாள், சுவாரஸ் யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற் சாகத்தோடும் பணி புரிவீர்கள், உறவு பகை பாராமல் உத வும் நாள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய் திகள் வந்து சேரலாம், பயணங்களால் பிரப லமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப காரியச் செல வுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**கும்பம்** அன்றாடப் பணிகளில் முன்னேற்றம் காண் பீர்கள், ஆரோக்கியத் தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசு வீர்கள், நன் மைகள் நாடிவரும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள அதிகரிக்கும் வாய்ப்புண்டு.

**கன்னி** வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படு வீர்கள், குடும்ப மகிழ்சி அதி கரிக்கும், சுய முயற் சியின் மூலம் சுகம் காணும் நாள், தொழில் ரிதியாக புதிய முயற்சி கைகூடும் நாள்.

**தனுசு** மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியாக பயணங்களின் போது கூடுதல் கவனம்தேவை.

நேரத்தை சரியாகப் பயன்படுத்தாதவன் எண்ணியதை ஒரு நாளும் அடைய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 02 XXVII

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்


டி.எஸ்.சேனநாயக்க


சேர்.பொன். இராமநாதன்


தந்தை செல்வநாயகம்

(நேற்றைய தொடர்ச்சி)

இந்து சமயக் கொள்கைகளுடன் இணைந்து செல்லக்கூடிய பௌத்தமும் நம் சைவமும் முட்டி மோதிக் கொள்வதன் சூக்குமம் இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.

பௌத்த விகாரைகளில் இந்துக் கடவுள்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது.

இவ்வாறான நிலையில் தமிழர்களில் பௌத்தர்கள் இல்லாத வெற்றிடமும் சிங்களவர்களில் சைவர்கள் இல்லாத இடைவெளியும் சைவம்-பௌத்தம் என்ற ஒன்றிணைந்த சமயங்களை அந்நியப்படுத்தி, பௌத்தம் என்றால் அது எங்களின் பகைச் சமயம் என்றாகிவிட்டது.

இங்கு பௌத்தம் சைவர்களின் பகைச் சமயம் என்றுரைக்கும் போது, அதன் மறுதலை சைவம் பௌத்தர்களின் பகைச் சமயம் என்பதாகவே கூறவேண்டும்.

ஆம். அவ்விதம் கூறுவதற்கு நம் மனம் ஏவவில்லை, ஏனெனில் பௌத்தர்கள் சைவாலயத்தில் வழிபாடாற்றுகின்றனர். கதிர்காமத்துக் கந்தனுக்குப் பூசை செய்கின்றனர்.

ஆனால் சைவர்கள் பௌத்த விகாரைகளுக்குச் சென்று வழிபாடாற்றுவது பற்றிய தகவல்கள் இன்னமும் இல்லை.

இதையும் கடந்து, சைவாலயங்களில் கௌதம புத்த பிரானை வைத்து வழிபாடு செய்வதான நடைமுறைகளும் இல்லை.

நிலைமை இதுவாக இருக்கும் போது, பௌத்த சிங்களவர்கள் சைவ சமயத்தை தமது பகைச் சமயமாகக் கருதுகிறார்கள் எனக் கூறுவதற்கான போதிய சான்றுகள் இல்லை என்றே கூற வேண்டும்.

இதைவிட, கௌதம புத்த பிரான் பரிநிர்வாண முத்தியடைந்த போதி மரம் என்பது அரசமரத்தைக் குறிப்பதாகும்.

அரசமரம் பௌத்தர்களின் வழிபாட்டுக்குரியது மட்டுமல்ல. அஃது இந்துக்களினதும் வழிபடு தரு.

பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அரச இலையில் அவதரித்தார் என்கிறது புராணம். இது தவிர, எங்கள் ஈழத்தமிழர்களின் ஆதிகால வழிபாட்டில் அரச மரம் முதன்மைக்குரியது.

அதனாலேயே **அரசனை நம்பி புருசனைக் கைவிடாதே** எனத் தமிழ்ப் பழமொழி கூறலாயிற்று.

இங்கு அரசன் என்பது அரச மரத்தைக் குறிப்பதாகும்.

அதாவது பழந்தமிழ் பண்பாட்டில், குழந்தைப் பேறு இல்லாத பெண்கள் அரச மரத்தைச் சுற்றி வலம் வந்து வழிபாடு செய்தால், தாய்மை அடையும் பேறு கிடைக்குமென கருதப்பட்டது.

ஆக, அரச மரத்தை எங்கள் வழிபடு தருவாக நாம் போற்றி வந்துள்ளோம் என்பது இங்கு உறுதியாகிறது.

ஆயினும் சமகாலத்தில் அரச மரம் எங்கிருந்தாலும் அதில் புத்தர் சிலையை வைக்கின்ற பௌத்த ஆக்கிரமிப்புக் காரணமாக அரச மரத்தை தறித்து விடுவது தான் ஒரே வழியென்ற நிலைக்கு சைவ மக்கள் வந்துவிட்டார்கள் என்பது வேதனை மிகுந்த உண்மைச் செய்தியாகும்.

### பௌத்தமும் சைவமும் ஒற்றுமைப்பட்டிருந்த காலம்

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னதாக பௌத்தமும் சைவமும் மிகுந்த ஒற்றுமையோடு இருந்துள்ளதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

சைவப் பெருவள்ளல் சேர்.பொன்.இராமநாதன் பிரபு, பௌத்த சிங்களவர்களை முழுமையாக நம்பினார். பௌத்தமும் சைவமும் ஒன்றென அவர் கருதியதால், பௌத்த சிங்களவர்களும் தமிழர்களும் ஒற்றுமையாக வாழ முடியும் என முடிவு செய்தார்.

அதன் காரணமாகவே தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை பற்றி அவர் தனித்துச் சிந்திக்கவில்லை.

ஆம், நாடு சுதந்திரமடைந்த போது நாட்டின் முதலாவது பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்கா தனித்து சிங்களவர்கள் பற்றிச் சிந்தித்த போது தான், அழகிய இலங்காபுரியில் இனவாதமும் மதவாதமும் தலைவிரித்தாடத் தலைப்பட்டது எனலாம்.

இதை நாம் கூறும் போது, டி.எஸ்.சேனநாயக்கா தனித்து பௌத்த சிங்களம் பற்றிச் சிந்தித்தோடு, இலங்கை பௌத்த சிங்கள நாடாக இருக்க வேண்டும் என்ற மனநிலையில் அவர் தனது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்தார்.

அதே சமநேரத்தில் பௌத்தர்களும் சைவத் தமிழர்களும் ஒன்று சேர்ந்து விடக்கூடாது என்பதில் அந்நியராட்சியில் உள்நுழைந்த பிற சமயத்தவர்கள் கருதினர் என்பதும் இதில் தந்தை செல்வநாயகம் போன்றவர்களின் வகிபங்கும் உண்டென்பதும் மறுதலிக்க முடியாத உண்மை.

புருசோத்தமன்

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1071





இச்சமயத்தில் ஒரு பெண்ணின் குரல், "கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மாசனம் ஏறுவது என்றாலே ரொம்ப வெறுப்புப் போல் இருக்கிறது!" என்று கூறியதைக் கேட்டு எல்லோரும் அக்குரல் வந்த இடத்தைப் பார்த்தார்கள். அங்கே ஓடக்காரப் பெண் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள்.

குந்தவை அவளை வியப்புடன் பார்த்து, "பெண்ணே! நீ எப்படி இங்கே வந்தாய்?

இன்று காலை உன்னையும், ஈழத்து ராணியையும் காணாமல் நாங்கள் தேடி அலைந்தோமே? உன் அத்தை எங்கே?" என்று கேட்டாள்.

"தேவி! மன்னிக்க வேண்டும்! என் அத்தை என்னைப் பலவந்தமாகப் பழுவூர் அரண்மனையின் சுரங்க வழியாகப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து கோட்டைக்கு வெளியே அனுப்பி விட்டாள். நான் தஞ்சை அரண்மனையில் ஒருநாள் இருப்பது கூட என் அத்தைக்குப் பிடிக்கவில்லை! எனக்கும் அரண்மனை வாழ்வு பிடிக்கவில்லைதான்! கொடும்பாளூர் இளவரசிக்குச் சிம்மாசனமே வெறுத்துப் போயிருக்கும்போது, என்னைப் போன்றவர்களுக்கு அரண்மனையில் வசிக்க எப்படிப் பிடிக்கும்?" என்றாள் பூங்குழலி.

"பெண்ணே! எதையோ கேட்டால், எதையோ சொல்லுகிறாயே? உன் சித்தம் சரியான நிலையில் இல்லை போலிருக்கிறதே?" என்றாள் குந்தவை.

"அக்கா! அவள் சித்தம் சரியாகத்தான் இருக்கிறது. என்னைக் கேவலப்படுத்துவதற்காக வேண்டுமென்று இப்படிப் பேசுகிறாள். நான் சோழநாட்டின் சிம்மாசனம் ஏறி மகாராணி ஆகவேண்டும் என்ற ஆசை கொண்டிருக்கிறேனாம்! அதற்காகத்தான் தங்கள் தம்பியை பொன்னியின் செல்வரை மணக்க விரும்புகிறேனாம்! இவளுடைய மனசு எனக்கு நன்றாய்த் தெரிந்திருக்கிறது" என்றாள் வானதி.

"பாம்பின் கால் பாம்பு அறியும் என்ற பழமொழி பொய்யாகப் போகுமா?" என்றாள் பூங்குழலி.

"பெண்களே! நிறுத்துங்கள்! எந்தச் சமயத்தில் என்ன பேசுவது என்றே உங்களுக்குத் தெரியவில்லை. பூங்குழலி! உன் அத்தை இப்போது எங்கே இருக்கிறாள்?" என்று குந்தவை கேட்டாள்.

"பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் இருக்கிறாள்"

"எதற்காக?"

"அங்கே ஒரு கொலைகாரன் கையில் வேலுடன் ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆகா! அவனை நாங்கள் இருவரும் இன்று அதிகாலையில் படுத்தி வைத்த பாட்டை நினைத்தால்! எங்கள் இருவரையும் இரண்டு பெண் பேய்கள் என்று நினைத்துக் கொண்டு அவன் மிரண்டு போய் அங்குமிங்கும் ஓடியதை எண்ணினால்!" என்று கூறி விட்டுப் பூங்குழலி கலகலவென்று சிரித்தாள்.

இந்தப் பெண்ணுக்குச் சித்தப் பிரமைதான் என்று குந்தவை மனதில் எண்ணிக்கொண்டு, "அப்புறம் சொல்! அவன் யார்? எதற்காக ஒளிந்திருக்கிறான்? உங்களுக்கு எப்படி அது தெரிந்தது?" என்று கேட்டாள்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது, தேவி! என் அத்தைக்கு வாய் பேச முடியாவிட்டாலும் காது கேளாவிட்டாலும், நமக்கெல்லாம் தெரியாத விடயங்களைத் தெரிந்துகொள்ளும் அதிசயமான சக்தி உண்டு. அரண்மனையில் உள்ள யாரோ ஒருவரைக் கொல்லுவதற்காக அவன் அங்கே காத்திருக்கிறான் என்று எப்படியோ அறிந்து கொண்டாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மேகம் கறுக்கையிலே



ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேரத்தில் வந்து மழை பெய்யச் சொன்னால் நான் எங்கே போவது? மேகத்திற்குக் குழப்பம் வந்து விட்டது.

அது வருண பகவானிடத்தில் கேட்டது. "எல்லோருக்கும் மழை தேவையா இருக்கு இருந்தாலும் தங்களோட அற்ப சந்தோஷங்களை விட்டுக் கொடுக்க மனமில்லாம மழை வேண்டாம் என்கிறார்கள்.

இது தப்பு! நீ அவங்க வார்த்தைகளைப் பொருட்படுத்தாதே!. உனக்கு எப்பப் பெய்யணும்னு தோணுதோ, அப்ப பொழி!" என்ற வருண பகவான் மறைந்து போனார்.

மேகம் இப்போது யார் வார்த்தைகளையும் பொருட்படுத்துவதில்லை அதற்கு எப்போது பெய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது பெய்கிறது.

சில சமயம் பகலில். சில சமயம் இரவில். என்று பருவம் பார்த்துப் பெய்கிறது சில சமயங்களில் பெய்யாமலும் இருந்து விடுகிறது.

அது பெய்யாமல் இருந்து விடும்போது உயிரினங்கள் அதன் அருமையை நன்கு உணர்ந்து கொள்கின்றன. மழையை வேண்டிப் பிரார்த்தனை செய்கின்றன.

மழையின் சிறப்பை அவை நன்கு உணர்ந்து கொண்டன.

மேகம் எப்போது மழை பெய்தாலும் அதை அவைகள் மகிழ்ச்சியுடனும், ஆரவாரத்துடனும் ஏற்றுக் கொள்கின்றன.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.
~ திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கலும் நீங்கலா விளையாட்டும்

பயங்கரவாதத் தடைச் சட்டம் விரைவில் நீக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என்பது தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரமாக இருந்தது.

எனினும் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த பின்னர் அவர்கள் கூறியது போல பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை.

அதேநேரம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விரைவில் நீக்குவோம் என அநுர தலைமையிலான ஆளுங்கட்சி அமைச்சர்கள் அடிக்கடி கூறிவந்தனர்.

இங்கு தான் சொல்லொன்று செயல் இன்னொன்று என்பதான குற்றச்சாட்டு ஜனாதிபதி அநுரவின் அரசாங்கத்தை நோக்கி எழுந்தது.

இதில் மேற்போந்த குற்றச்சாட்டை முன்வைப்பதில் சர்வதேச சமூகம் முன்னிலை வகிக்கின்றதெனலாம்.

தவிர, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை யாரெல்லாம் ஆதரித்து அதனை போற்றித் துதித்தார்களோ அத்தகையவர்கள் மீதும் பயங்கரவாதத் தடைச்சட்டம் பாயத் தலைப்பட்டுள்ளது.

இதற்கு புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஸ் சலே தக்க சான்று. ஆம், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்ட வகையில் புலனாய்வுத் துறையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஸ் சலே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இங்கு அவரின் கைதும் விசாரணையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் செல்லுபடியாகிறது.

ஆம், ஒருகாலத்தில் தமிழ் மக்களை மட்டும் பயங்கரவாதத் தடைச் சட்டம் வஞ்சித்த போது, அது கண்டு சிங்களத் தரப்புகள் மௌனம் சாதித்தன.

ஆனால் இப்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் முன்னாள் சிங்கள அமைச்சர்கள், முன்னாள் சிங்கள அதிகாரிகள் மீதும் பாயத் தொடங்கிய போது, அடடா! பயங்கரவாதத் தடைச் சட்டம் பயங்கரமானது. அதனை உடனடியாகச் செயலிழக்கச் செய்ய வேண்டும் என இந்த நாட்டின் முன்னைய ஆட்சித் தரப்புகள் கோசம் போடுகின்ற அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

இந்த இடத்தில் தான் பயங்கரவாதத் தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

ஆம், பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் நீக்கம் என்பது அன்னவர்க்கே சாதகம் என்பதால், அந்த அறிவிப்பை ஜனாதிபதி அநுர வெளியிட்டார் என்று கருதவும் இடமுண்டு.

ஆக, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கலும் நீங்கலாத் தன்மையும் அன்னவர் விளையாட்டேயாம்.

# வழிபாட்டுத்தலங்கள் அதிக ஒலி எழுப்பும் சாதனங்களை பயன்படுத்துவதை தவிர்க்குக

## யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன்

(யாழ்ப்பாணம்)

வழிபாட்டுத்தலங்கள் அதிக ஒலி எழுப்பும் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வழிபாட்டுத்தலங்களில் ஒலி எழுப்பும் சாதனங்களின் ஊடான அதீத ஒலி எழுப்பல் செயற்பாட்டினால் பாடசாலை மாணவர்கள், கல்வி நடவடிக்கையினை மேற்கொள்வோர் தமது கற்றல் செயற்பாடுகளில் பாரிய இடர்பாடுகளை எதிர்கொள்கின்றார்கள்.

மேலும், யாழ்ப்பாண மாவட்டம் கல்வியில் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கும் இந்நிலையில் இச்செயற்பாடானது புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணம், க.பொ.த உயர்தரம் கற்றல் காலங்களில் மட்டுமல்லாது பரீட்சை காலங்களிலும் கல்வி கற்போரின் கற்றல் செயற்பாட்டில் பாரிய இடர்பாடுகளை ஏற்படுத்துவதனால், எதிர்காலச் சந்ததியினரின் கல்வி நடவடிக்கையானது முழுமையாகப் பாதிக்கும் சூழல் காணப்படுகிறது.

அத்துடன் வழிபாட்டுத்தலங்கள் அமைந்துள்ள சூழலில் வசிக்கும் முதியோர் மற்றும் நோய்வாய்ப்பட்டோர் அதீத ஒலி எழுப்பும் செயற்பாட்டினால் உடல், உள ஆரோக்கியத்தில் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்பதுடன் பிரதான வீதியோரங்களில் காணப்படுகின்ற வழிபாட்டுத் தலங்களில் ஒலி எழுப்பும் சாதனங்களின் அதீத சத்தத்தினால் வீதியில் விபத்துக்களும் ஏற்படக்கூடிய ஏதுநிலை காணப்படுகின்றது.

மக்களுக்கான ஆரோக்கியமான சமூக சூழலை கட்டியெழுப்பும் நடவடிக்கையின் கீழ், ஒலி எழுப்பும் சாதனங்கள் மூலம் அதீத ஒலி எழுப்பப்படுவதால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பில் சமூகத்துக்கு / மக்களுக்கு ஆலோசனை வழங்கி அவர்களை வழிநடத்தும் தார்மீக பொறுப்பு வழிபாட்டுத்தலங்களையே பெருமளவில் சார்ந்திருக்கிறது.

எனினும் சில வழிபாட்டுத்தலங்களின் ஒலி எழுப்பும் சாதனங்களின் ஊடாக அதீத ஒலியை எழுப்பும் செயற்பாடானது மக்கள் மத்தியில் பலத்த விசனத்தை ஏற்படுத்திவருகின்றது.

இவ்விடயத்துக்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றமை ஆன்மீகத்தை போதிக்கின்ற வழிபாட்டுத் தலங்களுக்கு பொருத்தமற்ற செயற்பாடாக இருப்பதனால் மனிதாபிமான ரீதியாகச் செயற்படுவதே அனைத்து வழிபாட்டுத் தலங்களின் நிர்வாகத்தினது தலையாய கடமையாகும்.

அவ்வாறு செயற்படாதபோது சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுவதும் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# காணிப் பிரச்சினையைத் தீர்ப்பது பிரதேச செயலாளர்களின் பொறுப்பு

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்

(யாழ்ப்பாணம்)

மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுதான் பிரதேச செயலாளர்களின் முக்கிய பொறுப்பாகவும் கடமையாகவும் இருக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தின் '5 ஆண்டுச் செயலாற்றுகை' தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டம், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (23) காலை ஆளுநர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

ஜனாதிபதி மக்களுக்குக் காணி உரித்துக்களை வழங்கும் 'ஹிமிகம' வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் உதவியுடனும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

போர் காரணமாக காணி ஆவணங்கள் மாவட்டச் செயலகங்களிலும் இல்லை மக்களிடமும் இல்லை. இதனால் மக்கள் காணிப் பிணக்குகளுடன் ஒவ்வொரு அலுவலகமாக அலைந்து கொண்டிருக்கின்றார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க, அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டிய நிலையில் சில அதிகாரிகள் பொறுப்பற்று மக்களின் காணிப் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கும் வகையிலேயே செயற்படுகின்றனர்.

திங்கட்கிழமைகளில் அலுவலகங்களுக்குச் சென்றால்கூட, காணி தொடர்பான அதிகாரிகளைச் சந்தித்துப் பேச முடியாத நிலைமை காணப்படுவதாக மக்கள் என்னிடம் நேரடியாகவே முறையிட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் காணிகள் வழங்கல் மற்றும் பிணக்குகளைத் தீர்ப்பதில் அரசியல் தலையீடுகள் காணப்பட்டன. அதிகாரிகள் சுயாதீனமாகச் செயற்பட முடியாத நிலை இருந்தது.

ஆனால், தற்போது அந்த நிலைமை இல்லை. நீங்கள் சுயாதீனமாகவும், நீதியான முறையிலும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். மாவட்டச் செயலாளரும் மாகாண காணி ஆணையாளரும் பல முயற்சிகளை எடுத்தாலும், கீழ் மட்டத்திலுள்ள அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பை வழங்குவதில்லை என்பது மிகவும் கவலைக்குரியது.

இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இதற்கு ஒரு முடிவுக்காண்பதற்கு அனைவரதும் முழுமையான ஒத்துழைப்பைக் கோருகின்றேன் என்றார். (ம-7)

# அம்பாறையில் மரணத்திலும் இணைபிரியாத தம்பதிகள்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் பாண்டிருப்புப் பகுதியில் கணவர் உயிரிழந்த கவலையில் அழுத அவரது வாழ்க்கைத் துணையான மனைவியும் சில மணித்தியாலங்களில் உயிரிழந்துள்ளார்.

கடந்த சில தினங்களாக கல்முனை ஆதார வைத்தியசாலையில் சுகவீனம் காரணமாகச் சிகிச்சை பெற்று வந்த சுந்தரமூர்த்தி என்பவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். தனது கணவரின் உயிரிழப்பைத் தாங்க முடியாத மனைவியும் சில மணி நேரங்களில் உயிரிழந்துள்ளார்.

குறித்த தம்பதிகள் மரணத்திலும் இணைபிரியாத தம்பதிகளாக இணைந்துள்ளமை அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகக் கட்டி பெருவாழ்வு வாழ சிறு தானிய அவரைகள் எம் கைவசம் உண்டே!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எமக்கு இயற்கையாகவே ஊட்டச்சத்தினை வழங்க பலவகை உணவு வகைகளைப் படைத்திருக்கின்றது. அனைத்தையும் நாம் உதறித் தள்ளிவிட்டு எமது சுயவிருப்பத்திற்காக அவசர உலக நடப்புகளில் மூழ்கி எமது உணவினையும் உட்கொள்ளவேண்டிய ஊட்டச்சத்தினையும் தவிர்த்து விடுகின்றோம்.

எது கிடைக்கின்றதோ அதனை எமக்கு தேவையான அளவுக்கு மேலாக உண்ணுவதிலும் அதன் மூலம் பலபிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவும் ஆளாகி விடுகின்றோம். "உணவே மருந்து, மருந்தே உணவு" என்பதனை வரிக்கு வரி கூறிக்களித்திடும் மக்கள் அந்த மருந்தை அளவுக்கு மீறி உட்கொள்ளலாகாது என்பதனை புரிந்து கொள்ள மறந்ததேன். எமது ஆடம்பரவாழ்க்கையில் தான் இந்த பிரச்சினை தலைதூக்குகின்றது. சிறுதானியங்கள் காலத்தால் முற்பட்ட உணவு. ஆதிமனிதன், கால்நடைகள் மற்றும் பறவைகள் உணவாக கொண்ட உணவு. உலகின் பல பாகங்களிலும் பல்லின மக்களாலும் பயிரிடப்பட்டு உணவாக்கப்பட்டவை.

வறட்சியை தாங்கி வளரக்கூடிய இவ்வகை தாவரங்கள் மனிதனின் ஆயுளையும் கூட்டக்கூடியதென சித்தர்கள் எடுத்தியம் பியிருக்கின்றார்கள். மாறாக எமது பிரதேசத்தில் வளரக்கூடிய இவ்வாறான உணவின் ஆதிக்கத்தை குறைத்து எமது பிரதேசத்தில் வளராத கோதுமையை அறிமுகப்படுத்தி அனைவரையும் நோய்வாய்ப்பட வைத்திருக்கின்றார்கள்.

நீரிழிவு நோய் கண்டவர்கள் தமது உணவில் அதிகம் சிரத்தை எடுத்துக்கொண்டால் குறிப்பாக குருதியிலுள்ள குளுக்கோசினளவை கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் பிரச்சினைகள் எதுவும் வந்துவிடாது என்பதனை அறிந்தும் எமது ஆசையின் விளைவினால் சக்கரையை அல்லது வெல்லத்தை ஏதோவொரு காரணத்திற்காக ஏதோவொரு விருப்ப தேவையின் பொருட்டு உள்ளெடுத்துவிட்டு பின்னர் அவதிப்படுவதனை அவதானிக்கலாம்.

தொற்றாநோய்களாயினும் நாம் அவதானமாக இல்லாதுவிட்டால் உடல்நலத்திற்கு கேடாகும். நீரிழிவு நோயென்பது வயது பால் வேறுபாடின்றி பலருக்கும் தற்போது ஒரு பிரச்சினையாகவே உருவெடுத்திருக்கின்றது.

இதற்கு முக்கியமான காரணமாக எமது உணவுப் பழக்கமே இருக்கின்றது என்பதனை நாம் மறந்துவிடலாகாது. எமது சரியான பழக்க வழக்கத்தினால் உணவு முறையினால இவ்வாறான நோய்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். எமது உணவுப் பழக்கத்தை ஒரு நேர்முறையான வழக்கத்தில் வைத்திருப்பதற்கு நாம் தான் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக நீரிழிவு நோய் கண்டவர்கள் மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். இன்னும் ஒரு படி போய் ஆசையைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும். ஆசையை அடக்கியவன் ஞானி, நாம் ஞானியாகவாவது வேண்டாம் ஆகக்குறைந்தது எமது உடல் நலனுக்காக எமது உடலுக்கு ஊட்டச்சத்தையும் சுகாதாரத்தையும் தரத்தக்க நீரிழிவு நோயை தணிக்கின்ற அல்லது இல்லாமல் செய்வதுபோல நாம் பாரம்பரிய முறைப்படியான மருந்துகளை உட்கொள்ளலாம்.

காபோவைதரேற்று குறிப்பாக வெல்ல உணவுகள் குளுக்கோசு நிறைந்த இனிப்புணவுகளை முற்றிலுமாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். கிளைசீமிக்ஸ் (Glycemic index) சுட்டி ஆகக்குறைந்த உணவுப்பொருட்களை உட் கொள்வது முக்கியமானதாகும். அதிலும் குருதியில் குளுக்கோசின் அளவை அடிக்கடி சரிபார்த்துக்கொள்ளலாம். அத்துடன் மேற்குறிப்பிட்டப்பட்ட கிளைசீமிக் சுட்டி மிகமிகக் குறைவான சிறுதானியங்கள் எமக்கான பொக்கிஷங்கள்.

சிறுதானியங்களில் நீரிழிவு நோயை அதிகரிக்கும் கிளைசீமிக்ஸ் சுட்டி மிகமிகக் குறைவு ஆதலால் ஆதிகாலத்தில் சர்க்கரை நோயென்ற இந்த நீரிழிவுக்கு சிறுதானியங்களை உணவாக்க எமது சித்தர்கள் பரிந்துரைத்தார்கள். இந்தியாவின் கர்நாடக மாநி லத்தில் குரக்கன் களியை கறியுடன் உணவாகக் கொள்வார்கள். அத் துணை சத்து நிறைந்தது அது. அந்த மாநிலத்தில் குரக்கன் அதிகமாக விளைவிக்கப்படுகின்றது. பிறமாநிலங்களிலிருந்து அங்கு வந்து குரக்கன் களியை உண வருந்தி செல்வார்கள்.

மலிவானதும் இலகுவாக விளைவிக்கக் கூடியதுமான சிறுதானியங்கள் எமது சொத்துக்கள். நவதானியங்கள் என்னும் ஒன்பது சிறுதானியங்களும் சமய நிகழ்வுகளில் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் எமது உணவில் அவற்றுக்கான முக்கிய இடத்தை நாம் இன்னமும் முழுமையாகக் கொடுக்கவில்லை. சிறு தானியங்க ளில் தினை, வரகு, கேள்வரகு, சாமை, குதிரைவாலி, குரக்கன், என்றும் ஏனைய தானியங்களாக கம்பு, இறுங்கு என்பனவும் இதிலடங்கும்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



இவற்றின் விலைகள் ஒரு கிலோ 800இற்கும் இன்னும் அதிகமாகவும் விற்கப்படுகின்றன. இவற்றின் விலை அதிகரித்திருப்பது அனைத்து மக்களுக்கும் இவற்றினை வாங்கி பயன்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

ஊர்களிலிருக்கும் மேற்குறிப்பிட்ட சிறுதானியங்களின் பாரம்பரியமாக வளர்த்த விதைகளை சேமித்து வைக்கின்ற பழக்கத்தை நாம் அவசியம் பின்பற்ற வேண்டும். சிறுதானியங்களில் ஊட்டச்சத்து அதிகமாகவும் அவற்றை விளைவித்து பயன்படுத்துதல் நல்லது. சிறுதானியங்களின் உணவு பங்களிப்பினை நாம் முழுமையாக பயன்படுத்தல் நல்லது.

காலநிலை பொய்த்து நெல்லுற்பத்தியில் விழுக்காடு ஏற்படும் போது சிறுதானியங்களை விதைப்பதன் மூலம் நாம் அவற்றை வளர்த்து எமது உணவுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இவ்வாறான சிறுதானியங்களை நீரிழிவு நோய்க்காக உணவாக அனைவரும் பயன்படுத்த முயலும்போது அவற்றின் கேள்வி அதிகரிக்க செய்யும். அதனால் சிறுதானிய உற்பத்தியை பெருக்குவதற்கும் அவற்றினை பயன்படுத்தி தயாரிக் கப்படும் உணவுப் பொருட்களின் கிடைக்கக் கூடிய தன்மையை அதி கரித்தால் மக்கள் விலை குறைவாக அவற்றைப் பெற்று உணவாக்க முடியும்.

இவ்வாறான நிலைமையை முன்கூட்டியே அனுமானித்து அதற் கேற்ப சிறுதானியங்களின் உற்பத்தியை இயன்றவரை அதிகரிக்க வேண்டும். பலவகை அவரைப் பயிர்களை எம்கைவசம் வைத்திருக்கின்றோம். இவ்வாறான அவரையின்ங்களை எமதுணவில் சேர்த்துக் கொண்டால் எமக்கான புரதச் சத்தை பெற்றிடலாம். நெல்லை அறுவடை செய்த நிலத்தில் அவ ரைகளை பயிரிட்டு இலகுவாக அதிக பராமரிப்பின்றி விளைச் சலை பெற்றுக் கொள்ள லாம்.

எமக்கான உணவினை நாமே தயாரிக்கும் வழிக்கு வந்துவிட்டால் உணவுப்பிரச்சினையை நாமே கையாள தொடங்கிவிடுவோம். வெறுமனே குளிகைகள் மற்றும் மருந்துகளுடனும் இன்சுலினுடனும் காலத்தை கழிக்காமல் தானியப் பயிர்களையும் அவரைப் பயிர்களையும் அதிகளவில் உற்பத்தி செய்து அனைவரும் வாங்கி பயன்படுத்தக் கூடியவாறு விளைச்சலைப் பெருக்கி இவற்றுடன் பழங்கள் மற்றும் நார்ச்சத்துக் களையும் உணவில் சேர்த்துக் கொண்டால இதற்கு தீர்வினையும் நாம் கண்டு கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நடராஜர்...

சி.வி.கே.சிவஞானம் வேண்டுகோள் விடுத்து கடிதமொன்றை எழுதியுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில், அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் பலாலியில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட நடராஜர் சிலை இன்னமும் அங்கே நிறுவப்படாது இருப்பது பற்றி எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயத்தில் தாங்களும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் அக்கறையெடுத்து இச்சிலையை மேற்குறிப்பிட்ட இடத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியிருந்தேன்.

இதனை நினைவூட்டி இந்த விடயத்தில் துரிதமான நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ம-7)

மஹஜன சம்பத — NLB
திகதி 2026.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 6227
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Q 2 8 6 5 7 2
அத சம்பத
Q 6 5 7 2
சீட்டிழுப்பு இலக்கம் 0802

சுப தவசக் — NLB
திகதி 2026.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 0343
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 22 62 66
4824

தன நிதானய
திகதி - 2026.06.23
சீட்டிழுப்பு இலக்கம் - 2257
I 17 27 33 43 I
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

மெகா பவர்
திகதி 23/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2575
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
T 14 11 35 45 49

ஜய JAYA — NLB
திகதி 2026.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 0495
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
Z 4 4 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4469
சீட்டிழுப்பு திகதி 23.06.2026
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
L 13 32 59 80
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 1536
வெற்றி இலக்கங்கள்
இடபம் 17 20 26 56 இடபம்
தேசிய லொத்தர் சபை

## புதிய வேதன...

ள்ளார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ பிரகடனத்தை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல், 2026 ஜூன் 22 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஜனாதிபதியினால் இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஆணைக்குழுவின் தலைவராக தெல்கே அஸோக பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஆணைக்குழுவின் செயலாளராக டி.எம்.சீ.நாலக்க திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி விடுத்துள்ள கட்டளையின்படி, பல ஆண்டுகளாக நிலவிவரும் வேதன மற்றும் ஓய்வூதிய முரண்பாடுகளினால் பகிரங்க நிதிசார் முகாமைத்துவத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்களைக் கருத்திற்கொண்டு, அவற்றுக்கு நிலைபேறான தீர்வுகளை வழங்குவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை (SC/FR 23/2014) மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களைக் கருத்திற்கொண்டு, ஒட்டுமொத்த அரச சேவைக்கான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்பு முன்மொழிவுகளை வழங்குதல்.

திறமையான நபர்களை அரச சேவைக்கு ஈர்க்கும் வகையிலும், அவர்கள் அரச சேவையை விட்டு விலகிச் செல்வதைத் தடுக்கும் வகையிலும் உள்நாட்டு மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப ஊக்குவிப்புகளைப் பரிந்துரைத்தல். புதிய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பயன்படுத்தி, இலங்கையின் அரச சேவையை எதிர்காலத்திற்கு உகந்த, பிரசைகள் மையப்படுத்தப்பட்ட மற்றும் பொறுப்புணர்வுடைய சேவையாக மாற்றுவதற்கான மூலோபாயங்களை வகுத்தல் போன்ற பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் ஒருவருடத்திற்குள் (01 வருடம்) நிறைவு செய்ய வேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழியின் 3ஆம் கட்டத்தின் 32ஆம் நாள் அகழ்வுப்பணிகள் நேற்று யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார் தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வின் போது ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட 19 மனித என்புக்கூட்டுத் தொகுதிகளும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதோடு புதிதாக எந்த ஒரு மனித எச்சங்களும் அடையாளம் காணப்படவில்லை. இதுவரை மொத்தமாக 412 மனித என்புக்கூட்டுத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 409 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

மூன்று பிற சான்றுப் பொருட்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இரும்பினாலான பெரிய வட்ட வடிவிலான பொருளும், கறுப்பு நிற பாசி மணிகளும், அணிகளும் சான்றுப் பொருட்களாக மீட்கப்பட்டது

மூன்றாம் [illegible]

பகுதி அகழ்வுப் பணிகள் நேற்றைய தினத்துடன் நிறைவுக்கு வந்தது. அடுத்த கட்ட அகழ்வுப் பணிகள் எதிர்வரும் ஜூலை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும். (ம-7,33)

## சித்தங்கேணி...

சுத்தானந்தர் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 08 ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் சித்தங்கேணி பக்கமாக பயணித்தபோது மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை (23)காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வேலை...

சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் வேலைவாய்ப்பு போட்டிப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

அத்தோடு வடமாகாணத்தில் பல வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அவற்றுக்குப் பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக நாளை வியாழக்கிழமை காலை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

தீர்வுகள் கிடைக்கப்பெறாமல்விடின் எதிர்காலத்தில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிப்போம் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## பருத்தித்துறை...

வையிடவோ அவற்றை புகைப்படம், காணொளி எடுப்பதற்கோ இராணுவத்தினர் அனுமதி மறுத்திருந்தனர்.

இந்நிலையில் வெளிச்ச வீடு அமைந்துள்ள பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து சுற்றுலாப் பயணிகளை கவரும்வகையில் அதனை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை (22) அப்பகுதிக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் வெளிச்ச வீட்டுப் பகுதியைப் பார்வையிட்டிருந்தார். (ம-7)

## யானை தாக்கியதில்...

ழந்துள்ளார். நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு குமுளமுனையைச் சேர்ந்த சர்விதன் என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். (ம-7,299)

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.06.2026 வெற்றி வாரம் 0935
ஆங்கில எழுத்து N மற்றும் வெற்றி இலக்கம் 6 2 5 6 1 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,214,498.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3201 | 25000 பணப் பரிசு 84943
சீட்டிழுப்பு திகதி 2026.06.23 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 30 38 52 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
DLB

சனிதா
திகதி 23.06.2026 வெற்றி வாரம் 5362
வெற்றி இலக்கங்கள் 07 28 37 45 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,686,656.00
செகன்ட் சான்ஸ் விசேட இல. ரூ. 50,000/- பணப்பரிசு 29484
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 1031
சீட்டிழுப்பு திகதி 23.06.2026
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 37 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,099,120.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4913 | வர்ணம்
சீட்டிழுப்பு திகதி 23.06.2026 | தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 14 22 56 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,988,484.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 32 32 37 45 70
சுப்பர் இலக்கம்
2377
23.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.300,753,164.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 3027
சீட்டிழுப்பு திகதி 2026.06.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,575,457.60
வெற்றி இலக்கங்கள் 25 48 52 59 D
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஞானசார தேரருக்கான சிறைத்தண்டனையை உறுதிப்படுத்திய கொழும்பு மேல் நீதிமன்றம்

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்த சிறைத் தண்டனையை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உறுதிப்படுத்தியது. தன்னை விடுதலை செய்யக் கோரியும், தண்டனையிலிருந்து விடுவிக்கக் கோரியும் ஞானசார தேரர் தாக்கல் செய்திருந்த மேன் முறையீட்டைத் தள்ளுபடி செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன இந்தத் தீர்ப்பினை வழங்கினார்.

இஸ்லாத்தை அவமதித்து, சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கும் வகையிலான கருத்தை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி, ஞானசார தேரருக்கு எதிராகப் பொலிஸார் தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

விசாரணைக்குப் பின்னர், கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அவர் மீதான குற்றச்சாட்டை உறுதிப்படுத்தி, அவருக்கு தண்டனை விதித்தது. (நி)

## கிளிநொச்சியில்...

மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-7,316)

## பாரிய புகை...

யாழ்ப்பாணம் காக்கைதீவு கழிவு மீள்சுழற்சி மையத்தில் நேற்று நண்பகல் வேளை பாரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது.

குறித்த தீயானது வேமாகப் பரவிய நிலையில் யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவின் ஒத்துழைப்புடன் கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த தீப்பரவலால் யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் பாரிய புகைமண்டலம் நிலவியது. இதன் காரணமாக வாகனச் சாரதிகள் கடும் அளௌகரியங்களை எதிர்நோக்கினர்.

இதேவேளை புகையானது வீடுகளுக்குள் புகுந்தமையால் பிரதேச மக்கள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கியிருந்தனர்.

வீடுகளுக்குள் முககவசம் அணிய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் சிறுவர்கள் சுவாசிக்கச் சிரமப்பட்டதாகவும் தெரிவித்த பிரதேச மக்கள் இது தமது ஆரோக்கியத்தை கேள்விக்குறியாக்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-7)


## சலூன் வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள சிகையலங்கரிப்பு நிலையம் ஒன்றிற்கு முன்அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. வெளிமாவட்டத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (7912)

தொடர்புகளுக்கு

077 985 8327

## பல்வகைத்தன்மையே இலங்கையின் பலம்

பல மதங்கள், இனங்கள் மற்றும் கலாசாரங்களால் இலங்கை வலிமையாக உள்ளது.

வேறுபாடுகளை ஆயுதமாக மாற்றுவதன் மூலம் வெறுப்புப் பேச்சு இவ் அடித்தளத்தை அச்சுறுத்துகிறது.

எங்களைப் பிரிக்கும் கருத்துக்களை நிராகரிப்போம். மரியாதை, இணக்கம் மற்றும் ஒற்றுமையைத் தெரிவு செய்வோம். (7775)

இந்தத் தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5905)

076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

01. குப்பிழான், இந்து, 1990, கேட்டை, MPH, MHA and MBA, PHD Reading, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (46762)
02. இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Serviour, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)
03. காரைநகர், இந்து, 1992, சுவாதி, Bachelor of Health science (Deakin University), New zealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49974)
04. இளவாலை, இந்து, 1994, மகம், Bsc computer Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53872)
05. கோண்டாவில், இந்து, 1993, உத்தரம், Bsc, Structural Engineering, Civil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58653)
06. நெடுங்கேணி, இந்து, 1987, ரேவதி, Master of Engineering, Civil Engineering and Business, Medical of science at Australia, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32687)
07. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B.Eng (HONS) computer Network Engineering (University of East London), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (51409)
08. கொக்குவில், இந்து, 1983, திருவோணம், Msc in Teasting Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30712)
09. கொல்லங்கலட்டி, இந்து, 1991, MSc in Economics and marketing (copenhagen university) Business, Denmark citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52531)
10. கரவெட்டி, இந்து, 1991, பூராடம், Electric and Electronics Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (35946)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-5903)

S.Sharma J.P
www.thaalee.com
074 359 3104
077 539 3728

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கொழும்பு பகுதிகளில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு கீழ்வரும் வேலைகளிற்கு வேலை ஆட்கள் தேவை.

மேசன் / உதவியாளர், டெரசோ தரை வேலை தெரிந்தோர் / பழக விரும்புவோர் பெயின்டர்/ உதவியாளர்.

வேலை திறமைகளின் அடிப்படையில் தகுந்த சம்பளமும், மேலதிக சன்மானங்களும் வழங்கப்படும். உதவியாளர்களிற்கு முன்அனுபவம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. தங்குமிட வசதிகள், உணவு வசதிகள் செய்து தரப்படும்.

No : 077 23 260 57 (2445)

## வேலையாட்கள் தேவை

வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிற்கு எலக்ரிஷன், பிளம்பர், எலக்ரிஷன் பிளம்பர் கெல்பர், ரையிலர் போன்ற வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு (2450)

070 783 4296

## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2028

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் : 27.06.2026 காலை 8.00 மணி (சனி)

நிர்வாகம் : 0777789815 (C-5902)

## வேலையாட்கள் தேவை

அழகுக்கலை நிலையம் ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை. அத்துடன் அழகு சாதனப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ள பெண் வேலையாட்களும் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (7912)

077 985 8327


# மரண அறிவித்தல்

மலர்வு 18 - 10 - 1947



உதிர்வு 21 - 06 - 2026

## திருமதி தங்கராணி கந்தையா

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மற்றும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராணி கந்தையா அவர்கள் கடந்த (21.06.2026) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னவி - சம்பரம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் நந்தினி, காலஞ்சென்ற கெங்காதரன் மற்றும் சசிகலா, லிங்கேஸ்வரன், லோகேஸ்வரன், மகேஸ்வரன், ஜானகி, திருக்கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, மகிழம்மா(மணி), சிவகுரு, இராசையா, தங்கராணி(கிளி), கனகம்மா, சிவபாக்கியம்(சித்தி) மற்றும் நல்லம்மா (அம்மாஅன்ரி), தங்கமலர் (முத்தம்மா), விமலாதேவி(ஆசை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவலிங்கம், சுவேந்தினி, ஜெயபாலன், ருஷாந்தினி, செனியாட்சன், சஞ்ஜீவிகா, சரண்யா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் தசோபன் - கீர்த்திகா, சமிதா - பிரசண்ணா, ரூசா - நிலு, சுபானு, அனிதா, அங்கதன், ஆதிரா, ஆராதனா, ஆருஷா, அமூர்திசன், அபினேஸ், ஆதேஸ், அஜீஸ், அக்ஷிதா, ஆதியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜனேஷாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2026) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சங்கிலியன் வீதி,
நல்லூர். (7984)

தகவல் : குடும்பத்தினர்
077 144 7660, 076 706 9681

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media